பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D M K

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 15] சென்னை: ஆனி 22உ (6—7—67) வியாழன் ★ வெளியூர்: ஆனி 23உ (7—7—67) வெள்ளி [இதழ்: 19

தீ பரவுகிறது!

சென்னை, ஜூலை 6—
கீழ்க்காணும் இடங்களில் இன்றும் தீவிபத்துக்கள் ஏற்பட்டன.

1. மேகலா தியேட்டர் அருகில்.
2. தேனாம்பேட்டை திருவள்ளுவர் சாலையில்.
3. மயிலாப்பூர் பீமண்ணன் பேட்டை.
4. சைதை முனியபிள்ளை சத்திரம் அருகில்.
5. இராயப்பேட்டை—புதுப்பேட்டை பகுதியில்.

சென்னைத் தீவிபத்துக்கள் -- சட்டமன்றத்தில் ஒத்திவைப்புத் தீர்மானங்கள் -- பரபரப்பான சம்பவங்கள்

'விபத்துக்கள் விந்தையானவை'

யாரோ இச்செயலில் ஈடுபடுகின்றனர்

குற்றவாளிகள் எவராயினும் உரிய தண்டனையைப் பெற்றே தீருவர்'

முதலமைச்சர் அண்ணா திட்டவட்ட அறிவிப்பு

சென்னை, ஜூலை 6—

சென்னையில் தொடர்ந்து நடைபெற்றுவரும் தீ விபத்துக்கள்பற்றி இன்று சட்டமன்றத்தில் பரபரப்பான நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

சென்னையில் தொடர்ந்து நிகழ்ந்துவரும் தீ விபத்துக்கள் குறித்து இன்றும் (நான்காவது நாளாக) ஒத்திவைப்புத் தீர்மானங்கள் கொண்டுவரப்பட்டன.

எதிர்க் கட்சித் தலைவர் திரு. பி. ஜி. கருத்திருமன், மற்றும் வி. கே. கோதண்டராமன் (இடது கம்யூ.), ஏ.ஆர் மாரிமுத்து (பி.சோ), கே. ஆர். நல்லசிவம் (ச. சோ.) ஆகியோரும் தனித்தனியே ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டுவந்திருந்தனர்.

எதிர்க் கட்சியான காங்கிரசுக் கட்சியின் தலைவர் திரு. பி. ஜி. கருத்திருமன் தமது ஒத்திவைப்புத் தீர்மானத்தில், தொடர்ந்து நடைபெற்றுவரும் தீ விபத்துக்களைத் தவிர்க்கப் போலீசார் தக்க நடவடிக்கை எடுக்கத் தவறிவிட்டதாகக் குற்றஞ்சாட்டும் வகையில் குறிப்பிட்டிருந்தார்.

திருவாளர்கள், வி. கே. கோதண்டராமன், கே. ஆர். நல்லசிவம், ஏ. ஆர். மாரிமுத்து ஆகிய மூவரும் தமது தீர்மானங்களில், இத்தீ விபத்துக்கள் திட்டமிட்ட சதியின் விளைவே என அஞ்சப்படுவதாகவும், அரசியல் மாச்சர்யம் காரணமாக இப்படிப்பட்ட நாசவேலைகள் நடைபெறுவதாகப் பொதுமக்கள் பேசிக்கொள்வதாகவும் சுட்டிக்காட்டி, தொடர்ந்து மாநிலம் முழுவதிலும் இது பரவி, அரசியல் சண்டைகளும், பூசல்களும் ஏற்படாமல் தவிர்க்கவேண்டும் என்றும் கோரியிருந்தனர்.

எதிர்க் கட்சித் தலைவர் திரு. கருத்திருமன் தமது தீர்மானத்தை ஆதரித்துப் பேசுகையில், முதலமைச்சர் தமது அறிக்கையில் காங்கிரசுக் கட்சியினர்மீது பழிசுமத்தும் வகையில் குறிப்பிட்டிருப்பதாகவும், எனவே இதுபற்றி நீதி விசாரணை வேண்டும் என்றும் வற்புறுத்தினார்.

தற்போது போலீசு விசாரணை நடைபெற்று வருவதாகவும், முழுத் தகவலும் கிடைத்து குற்றம் மெய்ப்பிக்கப்பட்டதும், நீதி விசாரணை குறித்து யோசிப்பதாகவும் முதலமைச்சர் அண்ணா அவர்கள் கூறினார்கள்.

எனினும், 'நீதி விசாரணை உண்டா இல்லையா?' என்பதைத் திரும்பத் திரும்பக் கேட்டுக்கொண்டிருந்த திரு. கருத்திருமன், 'முதலமைச்சரின் பதிலில் நான் திருப்தியடையவில்லை' எனக் கூறி, அவையைவிட்டு வெளியேறினார்; அவரைப் பின்பற்றி அவரது கட்சியினரும் வெளிநடப்புச் செய்தனர்.

பி. ஜி. கருத்திருமன்

திரு. பி. ஜி. கருத்திருமன் பேசுகையில், பத்திரிகையில் அறிஞர் அண்ணா அவர்களின் அறிக்கையில் உள்ள ஒரு வாக்கியத்தைச் சுட்டிக்காட்டி, 'இது, எங்கள் கட்சி மீது அவதூறு செய்வதாக—பழி சுமத்துவதாக உள்ளது' என்றார்.

"கழகத்தின் ஆதரவாளர்களான குடிசைவாழ் பகுதியினர்மீது அரசியல் விரோதம் காரணமாக வஞ்சம் தீர்த்துக் கொள்கிறார்கள்"

என்பதே அந்த வாக்கியம்.

இந்த நேரத்தில் முதலமைச்சர் அண்ணா அவர்கள் குறுக்கிட்டு, அதே பத்திரிகையை அவரிடமிருந்து வாங்கி, வாக்கியம் முழுவதையும் படித்துக் காட்டினார்.

அண்ணா:— "நான் அப்படிச் சொல்லவில்லை; '..... என்ற **பேச்சும் பலமாக அடிபடுகிறது'** என்றுதான் சொல்லியிருக்கிறேன்.

கருத்திருமன்:— " '**வஞ்சம் தீர்த்துக்கொள்கிறார்கள்**' என்ற வாக்கியத்துக்குப் பக்கத்தில் முற்றுப் புள்ளி இருக்கிறது."

அண்ணா:— "கருத்திருமன் அவர்கள் தமிழ் இலக்கியத்திலே நல்ல தேர்ச்சிபெற்றவர். முற்றுப்புள்ளி வந்தபின் '**என்ற**' என்ற சொல்லுடன் வாக்கியம் ஆரம்பிக்குமா என்பதை யோசித்துப் பார்க்கவேண்டும். எனவே, ஒரு பத்திரிகையில் வந்த அச்சுப் பிழையை வைத்துக்கொண்டு வாதிடுவது சரியல்ல. அதே பத்திரிகையின் துணைப் பத்திரிகையான 'தினத்தந்தி'யில், முற்றுப்புள்ளி இல்லாமல் முழு வாக்கியமாக வந்திருப்பதையும் பார்க்க வேண்டுகிறேன். இன்னும் எனக்கு முழுத் தகவலும் கிடைக்கவில்லை. அதனால்தான் அதோடு நிறுத்திக்கொண்டேன். முழுத் தகவலும் கிடைத்தபின் நீதி விசாரணை நடத்தவும் தயாராயிருக்கிறேன்.

"'பொதுமக்களிடையே அப்படிப் பேச்சு பலமாக அடிபடுகிறது' என்றுதான் கூறினேன். அதை என்னுடன் இணைத்து எதிர்க் கட்சித் தலைவர் கூறுகிறார். நேற்று முன்தினம்வரைகூடப் போலீசார் 'இத்தீ விபத்துக்கள் தற்செயலாக ஏற்பட்டவை' என்றுதான் எண்ணிக்கொண்டிருந்தனர். இப்போது அவர்களிடையேகூட, 'இதுஒருதிட்டமிட்ட சதிச் செயலாக இருக்குமோ' என்ற சந்தேகம் பலமாகப் பரவி, அதுபற்றிய ஆய்வு வேலையில் ஈடுபட்டுள்ளனர்.

"திரு. கருத்திருமன் 'நீதிவிசாரணை நடத்தினால், தமது கட்சி எப்படிப்பட்ட நடவடிக்கைக்கும் தயார்' என்றார். இதில் ஒன்றும் தயவு தாட்சண்யத்திற்கு இடமில்லை. யார் இச்செயலில் ஈடுபட்டிருந்தாலும் நிச்சயம் கடுமையாகத் தண்டிக்கப்படுவார்கள். இப்படிச் சொல்லுவது, கட்சியை அவதூறு செய்வதாக ஆகாது.

"இச்செயலில் ஈடுபட்டதாக மெய்ப்பிக்கப்பட்டால், அப்படிப்பட்டவர்களை திரு. கருத்திருமனே தமது கட்சிக்காரராக ஏற்க மாட்டார் என்பது எனது நம்பிக்கை."

வி. கே. கோதண்டராமன்

திரு. வி. கே. கோதண்டராமன் பேசுகையில் கூறியதாவது:—

"இந்த அரசின்மீது தவறான எண்ணம் ஏற்படுத்தும் வகையில் திட்டமிட்ட சதி வேலையின் விளைவாகவே இத்தீவிபத்துக்கள் நடத்தப்பட்டு வருகின்றனவோ என்ற பலமான வதந்தி நிலவுகிறது. இதுவரை நாம் பார்த்திராத அளவுக்கு இப்போது தீ விபத்துக்கள் நடைபெற்று வருகின்றன. இந்த ஆட்சிக்குக் களங்கம் உண்டுபண்ணவே மிகப் பெரிய சதித் திட்டமாக இது இருக்கக்கூடும். எனவே, தீவிரக் கண்காணிப்பு செய்ய வேண்டுமென்று முதலமைச்சரைக் கேட்டுக்கொள்ளுகிறேன்."

ஏ. ஆர். மாரிமுத்து

திரு. ஏ. ஆர். மாரிமுத்து பேசியதாவது:—

"கடந்த சில நாட்களாகத் தொடர்ந்து நடைபெற்றுவரும் விபத்துக்கள் சதிச் செயலின் விளைவே என்று அஞ்சப்படுகிறது. இதனால் அரசியல் மாற்சரியங்களும், பதட்ட நிலையும் மக்களிடையே ஏற்பட்டு, மாநிலம் முழுவதிலும் அரசியல் பூசலும் சண்டையும் ஏற்படாதவாறு, முளையிலேயே கிள்ளியெறிய தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்."

கே. ஆர். நல்லசிவம்

திரு. கே. ஆர். நல்லசிவம் பேசியதாவது:—

"திட்டமிட்ட சதியே இத்தீவிபத்துக்களுக்குக் காரணமாகக் கருதப்படுகிறது. இதில் முக்கியமாகக் கவனிக்க வேண்டியது என்னவென்றால், இது வெயில் காலமும் அல்ல—காற்றடிக்கும் காலமும் அல்ல! கூரைகள் எளிதில் பற்றிக் கொள்ளக்கூடிய காலமல்ல இது! எனவே, இது ஒன்றே போதும்—'திட்டமிட்ட செயல்' என்பதற்கு ஆதாரம்!

"தி. மு. க. செயலாளர்கள் வீடுகளாகப் பார்த்து எரிவதன் காரணம் என்ன?

"இப்படிப்பட்ட சந்தேகம் எல்லாம் வரக்காரணம் கால நிலைதான்.

"இது, 'தீவிபத்துக்குரிய காலமல்ல; எனவே, போலீசார் தக்க நடவடிக்கை எடுக்குமாறு உத்தரவிட வேண்டும்."

முதலமைச்சர் அண்ணா

முதலமைச்சர் அண்ணா அவர்கள், பதிலளித்துப் பேசுகையில் தெரிவித்ததாவது:—

"இந்தப் பிரச்சினையில் இந்த அவையின் உறுப்பினர்கள் எவ்வளவு உருக்கமும் அக்கறையும், அவசரமும் காட்டுகிறார்கள் என்பதை அறிந்து உண்மையிலேயே வரவேற்கிறேன்.

ஏற்கனவே பல தீவிபத்துக்கள் நடந்திருக்கின்றன; ஆனால் இப்போது நடந்துள்ள விபத்துக்கள் விந்தைமிக்கனவாக உள்ளன.

நான் நேற்று ஒரு தீ விபத்து நடந்த இடத்தைப் பார்த்துக்கொண்டிருந்தபோதே அந்த இடத்திலிருந்து கால் பர்லாங் தூரத்தில் மற்றோர் இடம் பற்றிக்கொண்டதாக ஓடிவந்து சொன்னார்கள்; அடுத்து இன்னொரு பக்கத்தில் புகை எழுந்தது; மிக்க வேதனையான சம்பவம் இது!

பாஸ்பரஸ் போன்ற வெடி மருந்துகளைத் தூவி, உரிய நேரம் வந்ததும் தானே பற்றி எரியக்கூடிய வகையில் செய்யப்படுவதாகப் பொதுமக்கள் பேசிக்கொள்கிறார்கள்.

முன்பெல்லாம் அடுப்பு நெருப்புப் பற்றியோ, விளக்குத் தீப் பிடித்தோ தற்செயலாக விபத்துக்கள் ஏற்படுவதுண்டு. 'அப்படிப்பட்டதல்ல இது' என்பது, ஏற்பட்டுவரும் தீ விபத்துக்களின் அளவிலிருந்தும் முறையிலிருந்தும் தெரிகிறது. இதனை ஒப்புக்கொண்டால், 'யாரோ இந்தச் செயலில் ஈடுபடுகிறார்கள்' என்பதும் உண்மையாகிறது.

இந்தச் சமூக விரோதச் செயலில் ஈடுபடுபவர்கள் எந்தக் கட்சியில் பாத்தியதை கொண்டாடுபவர்களாக இருந்தாலும் அந்தக் கட்சியின் தலைவர்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் என்பதை நான் திடமாக நம்புகிறேன்.

போலீசாரும், இச்செயல் திட்டமிட்டு நடத்தப்படுவதாக ஒப்புக்கொள்கிறார்கள்.

ஒரு பெரிய விபத்து நிகழ்ந்தால் அதுபற்றிப் பொதுமக்களிடையே பலவிதமான பேச்சுக்கள் அடிபடத்தான் செய்யும். என்னிடம்கூடச் சில தாய்மார்கள், 'உங்களுக்கு ஓட்டுப் போட்டதால்தான்—கழகத்தை நாங்கள் ஆதரித்ததால்தான் இந்தச் சதி ஏற்பட்டிருக்கிறது' என்று மனவேதனையுடன் சொன்னார்கள். அனைவரும் அப்படி எண்ணத்தக்க விதத்தில்தான் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

இதுபற்றி அரசியல்வாதிகள் சொல்லிக் கொண்டிருப்பதைவிட, போலீசார் இந்தச் சதியைக் கண்டுபிடிக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள்; அவர்கள் இதில் வெற்றி பெறுவார்கள் என்றும் நம்புகிறேன்.

எந்தக் கட்சியிலும் பல மட்டங்கள் இருக்கலாம்; பல்வேறு மனப்பான்மையுள்ளவர்கள் இருக்கலாம்.

ஒரு பத்து நாட்களுக்குமுன் காங்கிரசுக் கட்சிப் பொதுக்கூட்டம் ஒன்றில் பேசிய ஒரு நபர், '**இன்னும் மாதக் கணக்கில்கூட இல்லை—நாள் கணக்கில்தான் இருக்கிறது; என்ன நடக்கிறது பாருங்கள்**' என்று கூறினாராம்.

இதைக் கேட்ட பொதுமக்கள் என்ன கருதுவார்கள்?

காங்கிரசுக்காரர்கள் என்று நான் மதிப்பது—காமராசர், கருத்திருமன், பக்தவத்சலம் போன்றவர்களைத்தான்; இப்படிப்பட்டவர்களை அல்ல!

(4-ம் பக்கம் பார்க்க)

சென்னை தீவிபத்து

முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து ரூ.10,000

சென்னை, ஜூலை 6—
சென்னை நகரில் நேற்றுவரை ஏற்பட்ட பல தீவிபத்துக்களால் பாதிக்கப்பட்ட குடிசைவாழ் மக்களுக்கு உடனடி நிவாரணம் அளிப்பதற்காக, முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து ரூ. 10,000 வழங்குவதாக அறிஞர் அண்ணா அவர்கள் அறிவித்தார்கள்.

தலைமை நிலையம் மேலும் ரூ. 2,000 வழங்குகிறது

தி. மு. கழகத் தலைமை நிலையம் தீவிபத்துக்கள் நிவாரணத்திற்காக நேற்று வழங்கிய ரூ. 3,000 மட்டுமின்றி இன்று மேலும் ரூ. 2,000 வழங்குவதாகக் கழகப் பொருளாளர் மு. கருணாநிதி அறிவித்தார்.

வாங்கிய கடன் வகையாகச் செலவிடப்பட்டதா?

மொரார்ஜியிடம் பிறக்கும் கருணைகூட இங்குள்ள காங்கிரசாரிடத்தில் பிறக்கக் காணேமே!

கட்சிக் கண்ணேட்டத்தை விட்டு நிலைமையை எண்ணிப்பாரீர்— மாநில உரிமையைப் பெறுவதில் ஒத்துழைப்புத் தாரீர்!

எதிர்க் கட்சியினருக்கு முதலமைச்சர் அறிஞர் அண்ணு அன்பழைப்பு

தமிழகச் சட்டமன்ற அரசின் வரவு-செலவுத் திட்டத்தின்மீது நடைபெற்ற பொது விவாதத்துக்குப் பதிலளிக்கும் வகையில் முதலமைச்சர் அண்ணு அவர்கள் ஆற்றிய உரையின் முற்பகுதி நேற்றைய இதழில் வெளியாகியுள்ளது. அதன் தொடர்ச்சி இங்கு தரப்படுகிறது.

டில்லியிடம் மாநில அரசு பட்டுள்ள கடன்பற்றியும், அது எந்தெந்த முறையில் பயன்பட்டிருக்கிறது என்பதனையும், மத்திய அரசிடம் மாநில அரசு தற்போது வட்டி வசூலைத் தள்ளிவைக்கத்தான் கேட்கிறதேயன்றி தள்ளுபடி செய்யக் கோரவில்லை என்பதையும் அண்ணு அவர்கள் மிக விளக்கமாக எடுத்துரைத்து, எதிர்க் கட்சியினரின் தவறான பிரசாரத்தையும் சுட்டிக்காட்டியுள்ளார்கள்.

மாநில அரசின் உரிமைகளைப் பெற்றுத் தரும் முயற்சியில், அரசுடன், கட்சிக் கண்ணேட்டத்தைவிட்டு ஒத்துழைக்குமாறும் அண்ணு அவர்கள் அன்பழைப்பு விடுத்துள்ளார்கள்.

சான்றுக்கு லெனினை அழைப்பது சரியன்று!

தயக்கத்தோடுதான் இந்த நிதிநிலை அறிக்கையைத் தயாரித்தேன். பழக்கம் இல்லை என்பது மட்டுமல்ல அதற்குக் காரணம்; ஏற்றுக்கொண்ட அரசும்—அதனுடைய பொருளாதார நிலைகளும்—நான் அரசு ஏற்றுக்கொண்டிருக்கிற காலத்தில் ஏற்பட்டிருக்கிற நெருக்கடிகளும் நல்ல ஒரு நிதிநிலை அறிக்கையை எளிதாகத் தயாரிக்கும் சூழ்நிலையை நிச்சயமாகத் தரவில்லை!

அதற்காகத்தான், இருக்கின்ற கடனைப் பற்றிக் குறிப்பிட்டேன்; அதற்கு நண்பர்கள் வாதாடினர்கள்—'அஸெட்ஸ் அண்டு லயபிலிடிஸ்' பற்றி வாதாடினர்கள்; '400 கோடி ரூபாய்க்குக் கடன் இருந்தால், 500 கோடி ரூபாய்க்குச் சொத்து வாங்கியிருக்கிறேம்' என்று!

சொத்து எவ்வளவு இருக்கிறது என்கிற கணக்கைப் பார்த்தா கடன் வாங்க வேண்டும்? கடன் வாங்குகிறவர்கள் சொத்துக் கணக்கைப் பார்ப்பது, சாதாரண வாழ்க்கை நியதியல்ல!

அது மட்டுமல்ல; கடன் வாங்குகிறேம் என்ருல், 'கடனே கூடாது என்று விவாதித்தேன்' என்ற வகையில் நண்பர்கள் சொன்னர்கள்.

அதிலேயும், 'வரியே போடக் கூடாது; போட மாட்டோம் என்று சொன்னேம்' என்று அரைகுறை வார்த்தைகளை வைத்துக்கொண்டு பேசியிருப்பதுபோலத்தான், 'கடன் வாங்க வேண்டும்' என்பதற்கு—எதிர்க் கட்சித் தலைவர், லெனின் அவர்களைச் சான்றுக்கு அழைத்தார்கள்!

லெனினை இவ்வளவு சாதாரண விஷயத்திற்கா சான்றுக்கு அழைக்க வேண்டும்? அவரை, மனத்திற்கு சிக்கல் ஏற்படும் வேறு பல பிரச்சினைகளுக்குச் சான்றுக்கு அழைக்கலாம்!

வாங்கப்பட்ட கடன் முறையானதுதானு?

ஆகவே, 'கடன் வாங்கலாமா, கூடாதா' என்பதல்ல கேள்வி; 'எதற்காக வாங்குகிறேம்' என்பதுதான் கேள்வி.

ஒரு 500 ரூபாய் என்னுடைய நண்பர் கருத்திருமனிடத்தில் கடன் வாங்கி—நான் ஒரு பசு மாடு வாங்கி பால் கரந்து—நானும் சாப்பிட்டு, மற்றவர்களுக்கும் விற்றுக் கடனை அடைத்தால், நண்பர் கருத்திருமனிடம் வாங்கிய கடனை கொடுக்கின்ற வாய்ப்பு கிடைக்கிறது! அப்படி வாங்கப்படும் கடன், வாங்கப்படவேண்டிய கடன்! அப்படி வாங்கப்படும் கடன், முறையாகப் பெறும் கடன்!

அதற்குப் பதிலாக, 'எனக்கு வேண்டியவர் கருத்திருமன்' என்பதற்காக, 'ஒரு 500 ரூபாயைக் கடனுகக் கொடுங்கள்' என்று கேட்டு வாங்கி ஒரு அல்சேஷன் நாய்க்குட்டியை வாங்கினேன் என்ருல், அது வாங்கக் கூடிய கடன் அல்ல! அந்தக் கடனை வாங்கினுல், திருப்பிக் கொடுக்க முடியாது.

எனக்குப் பதில் சொல்லும் வாய்ப்பு இருந்தால், காங்கிரசு உறுப்பினர்கள் சிலர் சொல்லலாம்—'அல்சேஷன் நாய் குட்டி போடாதா? விற்கக்கூடாதா? அதிலிருந்து இலாபம் வராதா?' என்று! அவர்கள் அப்படியெல்லாம் கேட்கமாட்டார்கள் என்று நினைக்கிறேன்; கேட்பார்கள் என்ருல், அதை, 'அல்சேஷன் ஆண் நாய்க்குட்டி' என்று சொல்லிவிடலாம் என்று கருதுகிறேன்.

கடனின் தன்மையைத் தீர்மானிப்பது எப்படி?

ஆக, வாங்கப்படும் கடன், பயன்படுத்தப்படும் முறையில்—நாம் அதிலிருந்து பெறக்கூடிய ஆதாயத்தைப் பொறுத்து—'போட்ட பணத்தைத் திருப்பி எடுக்க வேண்டும்' என்ற அந்த முறையில் செலவழிக்கப்பட்டதா என்பதைப் பார்த்துத்தான் கடனின் தன்மையைத் தீர்மானிக்க வேண்டும்.

'கடன்காரர்—கடன்காரர்' என்ருல், அதற்காகக் கடனே வாங்கக்கூடாது என்று சொல்லுகிறேம் என்று அர்த்தம் இல்லை!

இன்றைக்கு உலக பாங்கி ஏற்படுத்தப்பட்டிருப்பதன் நோக்கம், 'பல நாடுகளும் கடன் வாங்கவேண்டும்' என்ற எண்ணத்தோடுதான்!

கடன் என்பதைத் தமிழர்,வாங்கும் பொருள்களுக்கு மட்டும் அன்றி, செய்யவேண்டிய கடமைகளுக்கும், 'கடன்' என்று பெயர் வைத்திருக்கிருர்கள்!

வாங்கிய கடன் மூலம் பலனென்ன கண்டோம்?

'கடனே கூடாது; கடனே வாங்க மாட்டோம் என்று நாங்கள் சொல்லவில்லை. வாங்கிய கடன் குத்துமதிப்பாக, 400 கோடி என்ருல், வருவாய் வரும் துறைகளில் செலவழிக்கப்பட்டிருப்பது கிட்டத்தட்ட 170 கோடி ரூபாய்தான்!

வாங்கியிருக்கிற பணத்தில் சரியான முறையில் வருவாய் கிடைத்திருக்கிறதா என்பதை ஒரு நிபுணர் குழுவை வைத்து ஆராயச் சொன்னுலும், நான் தயார்!

மத்திய சர்க்காரிடமிருந்து வாங்கியிருக்கிற கடன்களை மூன்று வகைகளாகப் பிரிக்கவேண்டும்; ஒன்று—'டிஸ்ட் ரெஸ் லோன்'—நமக்கு நலிவு ஏற்படும்போது வாங்கிய கடன்.

இரண்டாவது—'அன் ரெம்யூனரேடிவ் லோன்'—பலன் கிட்டாத கடன்கள்; ஆனுல், வாங்கியே தீரவேண்டும்.

இன்னென்று—'ரெம்யூனரேடிவ் லோன்'—அதாவது, செலவழிக்கப்பட்டால், வருவாய் கிடைக்கும் கடன்கள்.

இந்த மூன்றில், 'அன்ரெம்யூனரேடிவ் லோன்'களும், 'டிஸ்ட்ரஸ் லோன்'களும் பெரும் பகுதி என்பதைக் கணக்கில் எடுத்துக்கொண்டால், அதில் சந்தேகம் வேண்டாம்—நேரம் இல்லாததால் அதிகமான புள்ளிவிவரங்களைக் கொடுக்கவில்லை; என்னுடைய வார்த்தையை ஏற்றுக்கொள்ளலாம்—400 கோடி ரூபாய் கடன் வாங்கினுல், அதில் பெரும் பகுதி வருவாய் தருகிற துறையில் பயன்படவில்லை.

முக்கியமாக மின்சாரத் துறைக்குச் செலவழிக்கப்பட்டது என்ருல், எதிர்பார்த்த வருவாய் வரவில்லை. உலக பாங்கியினர், இந்தக் கடன்களுக்கு எந்த அளவு வருவாய் வரவேண்டும் என்கிற கணக்கைக் கொடுக்கிருர்களோ அந்த அளவு வருவாய் வரவில்லை — மின்சாரத் துறையில் பெற முடியவில்லை.

இன்னெரு பகுதி, நீர்ப்பாசனத்திற்குச் செலவழிக்கப்பட்டது. நீர்ப்பாசனத்தின்மூலம் கிடைத்தது என்னவென்ருல், கிட்டத்தட்ட 3.5 கோடி ரூபாய் அளவுக்கு நஷ்டக் கணக்கில் இருக்கிறது—வருவாய் வரவில்லை; அதற்காக, 'மின்சாரமே வேண்டாம்; நீர்ப்பாசனமே வேண்டாம்' என்று சொல்ல முடியாது.

எங்கள் கூற்றுக்கு பொருள் என்ன?

'இலாபம் வேண்டும்' என்ருலும், சில காரியங்களைச் சமுதாயத்தின் நன்மைகளைக் கருதிச் செய்யவேண்டியிருக்கிறது. மின்சாரமும், நீர்பபாசனமும் சமுதயத்திற்கு நன்மை தரும் காரியங்கள். அவற்றிலிருந்து வருவாய் பெற்றுக் கடனை அடைக்க மார்க்கம் இல்லாமல் இருக்கிறது; ஆகையினுல்தான் கடன் பட்டிருக்கிறேம்.

'கடன்பட்டிருக்கிறேம்' என்று நாங்கள் வெளியிலேயும், வாய்ப்புக் கிடைக்கின்ற நேரத்தில் இங்கேயும் சுட்டிக்காட்டுகிறேம். அதனுல், 'கடன் வாங்கக்கூடாது' என்பதல்ல பொருள். வாங்கக் கூடிய கடன் சரியான முறையில் பயன்படுத்தப்படாமல், 'வருவாய் கிடைக்கவில்லை' என்பதுதான் வாதம்.

உதாரணத்திற்குச் சொல்லவேண்டும் என்ருல், வாங்கியிருக்கும் கடனில் 100 கோடி ரூபாயை அல்லது 200 கோடி ரூபாயை இலாபம் தரக்கூடிய துறையில் ஈடுபடுத்தி—நமக்கு வரி மூலமாக வருவாய்வருவதுபோல் தொழில்கள் மூலமாக கிடைக்குமானுல்—அப்படி வருவாய் வந்தால்—வட்டிகட்டுவதையோ அசல் தொகையையோ திருப்பிக் கொடுப்பதைப் பற்றியோ சங்கடப்படத் தேவையில்லை.

ஆகையால்தான், இந்தக் கடனுக்குச் செலுத்தவேண்டிய 16 கோடி ரூபாய் வட்டித் தொகையை இந்தத் தடவை தள்ளிக்கொடுக்க வேண்டும் என்று மத்திய அரசின் நிதியமைச்சரைக் கேட்டுக்கொண்டேன்.

நாங்கள் கேட்டதென்ன? நீங்கள் கூறுவதென்ன?

நம்முடைய நண்பர்கள் மாரடோரியம் என்று பயன்படுத்துகிருர்கள். அதே சமயத்தில் இங்கு 'கடனைக் கொடுக்கமாட்டேன்கிருரே' என்று கேட்கிருர்கள்.

'மாரடோரியம்' என்பது வேறு—கடன் 'ரைட் ஆப்' என்பது வேறு.

'ரைட் ஆப்' என்று கேட்டிருந்தால் 'கடன் வாங்கிவிட்டு, அதைத் தள்ளிவிடு என்கிருரே — அது என்ன நியாயம்' என்று கேட்கலாம்.

வாதத்திற்காகக் கூறுகிறேன்—அப்படிக் கேட்பதற்கு நமக்கு உரிமை இருக்கிறது.

(3-ம் பக்கம் பார்க்க)

சின்ன விஷயம் — வேலை இல்லாத பெருமாள்— வேலை கொடுத்த நாச்சியார்!

ஏற்றுக்கொண்ட வேலையை ஒழுங்காகச் செய்யவில்லையென்ருல், **காடு காத்தான்—கச்சேரி காத்தான்** மீதெல்லாம்கூட, சட்டப்படி நடவடிக்கை எடுக்கிற காலம் இது!

ஆனுல் வேலை இல்லாத வேலையை வேதனையில்லாமல் செய்துகொண்டிருந்த திரு. சத்தியநாராயண சின்காவை நாடாளுமன்றம் கண்டித்தபோது, என்ன 'சப்பைக்கட்டு' கட்டினுர் இந்திரா காந்தி!

'நம் நாடு' இதழ், சிறப்புக் கட்டுரை வெளியிட்டுச் சுட்டிக்காட்டியது அந்தக் காட்சியை!

இப்போது, வேலை இல்லாத பெருமாளுக்கு வேலை கொடுத்த நாச்சியார் ஆகிருர் தலைமை அமைச்சர்!

இலாகா இல்லாமல் மக்கள் வரிப் பணத்தில் கொழுத்த சம்பளம் வாங்கிக்கொண்டு வசதியோடு இருந்த சத்தியநாராயண சின்காவுக்கு ஒரு வேலை தேடிக் கொடுத்திருக்கிருர்!

பாவம்! கொஞ்சம் கஷ்டமான வேலைதான்! உட்கார்ந்த இடத்திலேயே ஒன்றும் செய்யாத சின்காவுக்கு ஊர் சுற்றிவரும் வேலை கொடுத்தால்......

இப்போதைக்கு அவர், தலைமையமைச்சர் சார்பில் உணவுப் பற்றுக்குறைப் பகுதிகளைச் சுற்றி வருவாராம்!

ஏற்கனவே அவர் பீகார் மாநிலத்தைச் சுற்றிவிட்டு வந்துவிட்டாராம்! உடனே உடல் நலம் குன்றிவிடவே, ஓய்வு கொண்டு இப்போது ஒரிசா போக இருக்கிருர்!

பஞ்சப் பகுதிகளுக்கு இவர் போவதால் அரசாங்கத்துக்கு என்ன இலாபமோ தெரியவில்லை! ஆனுல் பொதுமக்கள் ஒன்று புரிந்துகொள்வார்கள்; 'நாம் இப்படிப் பஞ்சத்தில் பரதவித்துக்கிடக்கையில்—**'காடுஞ் செடியும் இல்லாத ஊருக்குக் கழுதை முள்ளி கற்பக விருட்சம்'** என்பார்களே—அதுபோல, வேலை இல்லாமல் அரசாங்கப் பணத்தில் ஊரைச் சுற்றி வருகிருரே—என்று ஆச்சரியத்துடன் ஆளைப் பார்ப்பார்கள்!

எதுவுமே பழக்கத்தால்தான் வருவது! **'எடுத்து ஆளாத பொருள் உதவாது'** என்பார்கள் பெரியவர்கள். அதுபோல், வேலை செய்து பழக்கப்படாமல் கைகட்டி உட்கார்ந்துகொண்டிருந்தவரைப்போய், 'நகர் சோதனை'க்கு அனுப்பி இருக்கிருர்போலும்—தலைமை அமைச்சர்!

எட்டிக்குப் பால் வார்த்து வளர்த்தாலும் தித்திப்பு உண்டாகுமா என்ன?—அதொன்றுமில்லை!

ஆனுல் ஏ. ஸ்ரீதரன் என்ற ஒரு பாராளுமன்ற உறுப்பினர், பாராளுமன்றத்தில் — **கொஞ்சம் ஆத்திரத்துடன்தான்**—ஒரு கேள்வி கேட்டார்.

"ஆமாம்; விஞ்ஞானம்-தொழில் நுட்பம் பற்றிய ஒரு துறை நமக்குத் தேவையாக இருக்கிறது—சத்தியாநாராயண சின்காவோ, இலாகா இல்லாமல் இருக்கிருர்—இந்தப் புது இலாகாவை உண்டாக்கி இவரிடம் ஒப்படைத்தால் என்ன?" என்று கேட்டார் திரு. ஸ்ரீதரன்.

உள்ளபடியே, 'அது நல்ல யோசனை' என்று ஏற்றுக்கொண்டிருக்கிருர் இந்திரா காந்தி!

'சுவரின் மறைவில் ஆரடா' என்று கேட்டால், 'சுரக்காரன்; பத்தியம் சாப்பிடுகிறேன்' எனருனும் நோயாளி!

அந்தக் கதையாக இருக்கிறது—நம் தலைமை அமைச்சர் போக்கு!

ஏதோ ஞானசூன்யமான நாட்டிலே இருப்பது போலவும், சத்தியநாராயண சின்காவை விட்டால் வேறு ஆள் இல்லை என்பது போலவும் எண்ணிக்கொண்டு—அவரை அமைச்சராக்கிவிட்டு—இலாகாவுக்காக அலைவானேன்?

அமைச்சருக்காக இலாகாவா? இலாகாவுக்காக அமைச்சரா?

தலைக்குத் தகுந்த தொப்பியும், காலுக்கு ஏற்ற செருப்பும் வழங்குவதுதான் உலக வழக்கம்!

ஆனுல் இங்கேயோ, எல்லாம் தலைகீழாய் இருக்கிறது!

திட்டமிடுவது முதல் எல்லாவற்றையும் மேலே முடிவு செய்துவிட்டல்லவா கீழே உள்ளவர்கள் மீது திணிக்கிருர்கள்!

அதுபோலத்தான் எல்லாம்!

—பூரணன்

அறிஞர் அண்ணா அன்பழைப்பு

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

இதே மன்றத்தில், 'விவசாயிகள் பட்ட கடன்களுக்கு அவர்கள் கொடுத்த வட்டி, முதலுக்கும் அதிகமாகிவிட்டால் கடனைத் தள்ளிவிடலாம்' என்று கூறியிருக்கிறோம். அவ்வாறு நாமும் கேட்பதற்குக் காலமும் வரலாம்.

ஆனால் இந்தத் தடவை நான் சென்று கேட்டது, 'மாரடோரியம் என்பதாக!

நாங்கள் இப்போது ரூபாய்க்கு ஒரு படி அரிசி போடுவதிலே ஏற்படுகிற துண்டு—சிறிய நீர்ப்பாசனத் திட்டத்திற்கு வேண்டிய அதிகப் பணம்—ஆகிய செலவுகள் இருப்பதால், நாங்கள் கட்டவேண்டிய வட்டியை இந்த ஆண்டிருந்து தள்ளிக் கொடுங்கள்—ஒத்திவையுங்கள்' என்றுதான் கேட்டோம்.

அதை நம்முடைய நண்பர்களெல்லாம் சரியாகப் பரிசீலிக்காமல், 'கடனைத் தள்ளிவிடு என்கிறூரே' என்று சொன்னார்கள்.

கருணையை எளிதாக எங்கிருந்து பெறுவது?

மொரார்ஜி தேசாயே இந்த அளவுக்குப் பேசவில்லை; அவர் தயக்கத்தோடுதான் பேசினார். நீங்கள் நம்புகிறீர்களோ, இல்லையோ—அவர் என்னுடைய கோரிக்கைக்கு இணங்கிவருகிற நிலைகூட ஏற்பட்டது.

ஆனால் அந்த நேரத்திலேதான், கெய்ரோ நகரத்திலே இஸ்ரேல் குண்டு வீசிய தந்தி வந்தது. அவரும் என்னுடைய கடைசி வாதத்திற்குப் பிறகு அந்தத் தந்தியைக் காட்டி, 'இப்பொழுது என்ன செய்யச் சொல்லுகிறீர்கள்?' என்று கேட்டார்.

இதிலிருந்து ஒன்றை நான் தெரிந்துகொள்ளுகிறேன்—அண்மையில் உள்ளவர்களிடமிருந்து பெறக்கூடிய கருணையைவிட, தூரத்திலுள்ளவர்களிடமிருந்து எளிதாகப் பெறமுடியும்போல் இருக்கிறது!

இதை சொல்வதற்கு இன்னொரு காரணமும் இருக்கிறது. நான் மத்திய அரசுடன் மோதப்போகிறேனே என்று கஷ்டப்பட்டுக்கொண்டு பேசுகிறீர்களே—அதற்குப் போதுமான காரணம் இல்லை என்பதற்கு இதையே ஓர் எடுத்துக்காட்டாகப் பயன்படுத்திக்கொள்ள விரும்புகிறேன்.

கட்சிக் கண்ணேட்டம் எதற்கு?—நாட்டின் நலனுக்கு ஒத்துழைப்புத் தாரீர்!

அங்குள்ளவர்கள் அனுதாபத்தோடு கவனிக்க முன்வருகிறார்கள்; ஆனால், இங்கே காங்கிரசுக் கட்சி உறுப்பினர்கள் பேசிய பேச்சை யெல்லாம் காட்டுகிறார்கள்; 'வேண்டாமென்று அவர்களே கூறுகிறார்களே—நீங்கள் கேட்கிறீர்களே' என்று எடுத்துச் சொன்னார்கள்.

நல்லவேளையாக நம்முடைய முன்னாள் முதல்வர் பக்தவத்சலம் அவர்கள், 'இந்தக் கோரிக்கை கவனிக்கத்தக்கது' என்று சொன்னார்கள். அதை நான் அவர்களுக்கு நினைவு படுத்தினேன்; 'அப்படியா' என்று ஆச்சரியப்பட்டார்கள். பத்திரிகைக் குறிப்பையே எடுத்துக் காட்டினேன்—'ஆம்; பக்தவத்சலம்தான் சொல்லியிருக்கிறார்' என்றேன்; 'ஆச்சரியமாக இருக்கிறதே' என்று சொன்னார்கள்.

ஆகவே, அருள்கூர்ந்து திராவிட முன்னேற்றக் கழக அரசு மத்திய அரசிடமிருந்து இந்த மாநில அரசுக்கு உரிமைகளைப் பெற்றுத் தர முயற்சியெடுக்கின்ற பொழுது—நிதிகளைப் பெற்றுத்தர முயற்சிக்கின்றபொழுது—தொழிற்சாலைகளை ஏற்படுத்தித் தர முயற்சிக்கின்றபொழுது—கட்சிக் கண்ணேட்டத்தை மறந்து நாட்டுக் கண்ணேட்டத்தோடு அரசுடன் ஒத்துழைக்க வேண்டுமெனப் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

ஜூலை 23—எழுச்சி நாள்: காங்கிரசு நிலை என்ன?

அதை நடைமுறையில் செய்வதானால் சேலம், தூத்துக்குடி ஆகிய இரண்டு திட்டங்களை வலியுறுத்துவதற்காக 'எழுச்சி நாள்' கொண்டாடும்பொழுது, 'காங்கிரசுக்காரர்கள் கலந்து கொள்ளக்கூடாது' என்று அறிக்கை விடக்கூடாது.

நாங்கள், 'எழுச்சி பெறலாம்' என்று கூறுகின்றபொழுது, 20 ஆண்டுகளாக அரசாண்டிருந்தவர்கள், 'ஆமாம்; எழுச்சி பெறலாம்' என்றுதான் சொல்ல வேண்டும்.

ஆகையால், இந்த அரசு இந்த முக்கியமான காரியத்திலே ஈடுபடுகின்றபொழுது ஒத்துழைப்பதற்கு அறிகுறியாக ஜூலை 23-ந் தேதியன்று, 'சேலம்—தூத்துக்குடி ஆகிய திட்டங்கள் தமிழகத்திற்கு நிச்சயம் தேவை' என்று திரு. கருத்திருமன் அவர்களும், திரு. விநாயகம் அவர்களும், திரு. பொன்னப்ப நாடார் அவர்களும் என்னுடைய வலது, இடது புறங்களிலே இருப்பார்களேயானால், அப்போதுதான், 'அவர்கள் எதிரிக் கட்சி அல்ல—எதிர்க் கட்சி' என்பதை நிரூபிக்க முடியும்.

ஜூலை 23-க்கு அதிக நாள் இல்லை; 23-ந் தேதி வருகின்ற நேரத்திலே உங்களுடைய போக்கையும், நடவடிக்கையையும் தெரிந்துகொள்ள முடியும்.

அரசு நடவடிக்கையில் திருப்பம் ஏற்படும்!

இப்பொழுது வாங்கப்பட்டிருக்கும் கடன்கள் சரியான வகையில் செலவழிக்கப்பட்டிருக்கிறதா என்பது பற்றி நிதிக் குழு அறிக்கையில் விரிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அவைகளைப் படிப்பதற்கு நேரமில்லை; நான் படித்துக் காட்டித்தான் தெரிந்து கொள்ள வேண்டுமென்ற நிலையில் நீங்கள் இல்லை.

இப்போது அவர்கள் 14 கோடி ரூபாய் வட்டியை ஓர் ஆண்டிற்கு 'மாரடோரியம்' தரமாட்டேன் என்று சொல்லிவிட்டபடியால், இந்த அரசின் அடுத்த நடவடிக்கை, வாங்கப்பட்ட கடன்களை ஆராய்ந்து பார்த்து—எந்தெந்தக் கடன்களைத் தள்ளுபடி செய்ய வேண்டும்—எந்தெந்தக் கடன்களுக்கு வட்டி இல்லாமலும், 'டிஸ்ட்ரஸ் லோன்' ஆகவும் பாவிக்க வேண்டும் என்பதை முடிவு செய்யவேண்டும். இவ்வாறு ஒரு திருப்பம் இருக்க வேண்டும்.

நலிவு நீங்கத் தந்த பணம் கடனுவதா?

உதாரணமாக தங்கக் கட்டுப்பாட்டுச் சட்டம் கொண்டுவந்த போது அணிகலத் தொழிலாளர்கள் இங்கே அவதிப்பட்ட நேரத்தில் மத்திய அரசுக்கு அதுபற்றி மாநில அரசு எழுதிற்று; அணிகலத் தொழிலாளர்களுக்கு நிவாரணம் அளிக்கும் பொருட்டுச் சில கோடி ரூபாய்களை—மூன்று கோடிக்கு மேல் என்று சொல்கிறார்கள்—அவர்கள் கொடுத்தார்கள். அதை வாங்கி, வேலை இழந்தவர்களுக்கு வேறு வேலைவாய்ப்பு தேடிக்கொள்ளுவதற்கு இந்த அரசு முயற்சிகள் எடுத்துக் கொண்டது.

மத்திய அரசு போட்ட சட்டத்தினுலேதான் இந்த நிலைமை ஏற்பட்டது. அந்தச் சட்டத்தை நாம் விரும்பவுமில்லை—கொண்டு வரவுமில்லை; 'அது தேவையற்றது' என்றும் நாம் எடுத்துச் சொல்லிவந்தோம்.

தங்கக் கட்டுப்பாட்டுச் சட்டத்தைக் கொண்டுவந்து நம்முடைய மாநில அணிகலத் தொழிலாளர்களுக்கு நலிவை ஏற்படுத்தி அதைத் தீர்ப்பதற்குக் கொடுத்த பணத்தை, 'கடன்' என்று கொள்ள வேண்டுமா?

நியாயமுள்ளவர்கள் என் எதிரிலே நிரம்பியிருக்கிறார்கள். அங்கு உள்ளவர்கள் காங்கிரசுக் காரர்களாக இருக்கலாம்—நாங்கள் கழகத்தவர்களாக இருக்கலாம்; ஆனால், அணிகலத் தொழிலாளர்களின் நலிவை நீக்குவதற்குக் கொடுத்த பணத்தைக் கடன் என்று எழுதி அதற்கு வட்டி வாங்க வேண்டுமா?

இராமநாதபுரம், தஞ்சை, சற்று நாள் முன்னால் தென்னாற்காடு மாவட்டம் ஆகிய இடங்களிலே வீசிய புயலினால் தொழிலாளர்களுக்குப் பொருள் நஷ்டமேற்பட்டது; அந்தப் புயல் நிவாரணத்திற்காகக் கொடுத்த தொகையை—இரண்டு கோடி அல்லது மூன்று கோடி ரூபாய் என்று நினைக்கிறேன்—'டிஸ்ட்ரஸ் லோன்' என்று எழுதி, அதற்காக நம்மிடத்தில் வட்டி வாங்க வேண்டுமா?

புயலினால் ஏராளமான பொருள் நஷ்டம்; பல உயிர்கள்கூடப் பறிக்கப்பட்டன; அதைச் சொல்லி, 'புயல் நிவாரண நிதி வேண்டும்' என்று கேட்டதற்கு இரண்டு கோடி ரூபாயோ மூன்றுகோடி ரூபாயோ கொடுத்தார்கள்; அதை 'டிஸ்ட்ரஸ் லோன்' என்றார்கள். பெயர்தான் 'கடன்' (லோன்) என்று இருக்குமே தவிர 'டிஸ்ட்ரஸ் லோன்' என்றால், நலிவுற்றவர்களுக்கான—நலிவைத் துடைப்பதற்காகக் கொடுக்கின்ற உதவித் தொகை'யாகத்தான் அதைக் கருதி இருக்கவேண்டும்.

அதையும் கடனிலே எழுதிவைத்துக்கொண்டு அதற்கும் அவர்கள் வட்டி வாங்கவேண்டுமா? நியாயம் என்று சொல்கிறீர்களா? இதிலிருந்து ஏதாவது வருவாய் வருவதாகச் சொல்லுகிறீர்களா?—இல்லையே!

நியாயத்தை மறுப்பது பொருத்தமானதுதானா?

இன்னும் நீங்கள் தள்ளிப்போவீர்களானால்—ஆந்திரமும் தமிழகமும் ஒன்றாக இருந்த நேரத்தில் 'காம்போசிட் மெட்ராஸ் ஸ்டேட்' என்ற நிலையில் இருந்த நேரத்தில் புயல் நிவாரணத்திற்காகக் கொடுத்த பணம், ஆந்திரமும்—தமிழகமும் வேறு வேறாகப் பிரிந்தவுடன் நம்முடைய பங்குக்கு வந்திருப்பது கிட்டத்தட்ட 13 கோடி ரூபாய் ஆகும்.

அதற்கு இதுவரையில் வட்டி மட்டும்—என்னுடைய நினைவு சரியாக இருக்குமானால்—ஐந்து கோடி ரூபாய் கட்டியிருக்கிறோம் என்று கருதுகிறேன். அந்த கடன் நமக்குத் திரும்பியா வரும்?

புயல் அடித்ததனால் செலவழித்தோமே—பணம் அந்தப் பணத்தைத் திரும்பியா பெறப்போகிறோம்?

ஆனால், அந்தப் பணத்தைக் கடனுக்கு வரவு வைத்து, அதற்கு வட்டி கட்டச் சொல்கிறார்கள்; இதனை, 'நியாயம்' என்று சொல்கிறீர்களா?

காங்கிரசிலே இருங்கள்—'வேண்டாம்' என்று சொல்லவில்லை; ஆனால், நியாயத்தை விட்டு விட்டா காங்கிரசிலே இருப்பது? காங்கிரசிலே இருந்து கொண்டா நியாயத்தை மறுப்பது? நியாயத்தின் அடிப்படையிலேதானே காங்கிரசு அமைந்திருக்கிறது? அப்படித்தானே நீங்கள் சொல்லுகிறீர்கள்? நாங்களும் நம்புகிறோம்—அப்படி இருக்கிறபோது, 13 கோடி ரூபாய் எப்போதோ புயல் அடித்த நேரத்தில் தரப்பட்டதே—அதைக்கூட இந்த நிமிடம்வரை தள்ளுபடி செய்யவில்லை. அதற்கும் வட்டி கட்டிக் கொண்டு வருகிறோம்!

எங்கே நியாயம்? எங்கே நேர்மை?

இந்த மின்சாரத் திட்டத்திற்கென்று கனடா நாட்டவர்கள் இலவசமாகச் சில கருவிகளைத் தந்திருக்கிறார்கள். நெடுந்தொலைவிலே இருப்பதாலே அவர்களுக்கு நம்மிடத்திலே கொஞ்சம் கருணை இருந்திருக்கிறது.

மத்திய அரசு செய்ததெல்லாம் கனடா நாட்டுக்காரர்கள் கொடுக்கிற இயந்திரத்தை நாம் பெற்றுக்கொள்வதற்கு அனுமதித்ததுதான்; இயந்திரத்தினுடைய மதிப்பு கிட்டத்தட்ட ஒன்பது கோடி ரூபாய்; இனமாக நமக்குக் கனடா கொடுத்தது. அந்த ஒன்பது கோடி ரூபாயும் கடனாக எழுதப்பட்டு அதற்கும் நாம் வட்டி கொடுத்துக் கொண்டுவருகிறோம்; 'தேவை' என்கிறீர்களா? நியாயந்தான் என்கிறீர்களா? நிச்சயம் சொல்லமாட்டீர்கள்.

இன்னும் இதைப்போன்ற விவரங்கள் நிரம்ப இருக்கின்றன. ஏற்கனவே பலபேருடைய பேச்

(4-ம் பக்கம் பார்க்க)

நேரு உறுதிமொழியை நிறைவேற்ற இயலாவிடில்....

பதவியைவிட்டு வெளியேறுக!

டில்லி அரசுக்கு வி. கிருஷ்ணமூர்த்தி அறைகூவல்

புதுடில்லி, ஜூலை 4—

"மொழிப் பிரச்சினை பற்றிய மசோதா மீது கருத்தறிவிக்க, இந்தி பேசாத மாநில அரசுகளுக்கு மட்டும் குறிப்பை அனுப்பாமல் இந்தி பேசும் மாநிலங்களுக்கும் அனுப்பியிருப்பதிலிருந்து, அதற்குத் தலைமை அமைச்சரும் துணைத் தலைமையமைச்சரும் எதிர்ப்பை எதிர்பார்க்கிறார்கள்"

என்று நாடாளுமன்றத்தில் கழக உறுப்பினர் வெ. கிருஷ்ணமூர்த்தி குற்றஞ்சாட்டினார். உள்துறை அமைச்சகத்தின் மானியக் கோரிக்கைமீது பேசுகையில் அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

இயலாவிடில் வெளியேறுக!

"ஆங்கிலம் இணை ஆட்சிமொழியாக இருக்கும் என்ற உறுதிமொழியைப் பெற்றிருக்கும் இந்தி பேசாத மாநிலங்கள் மட்டுமே இம்மசோதாவுக்குத் தொடர்புடையனவாகும்.

ஆட்சிமொழி குறித்து இந்தி பேசாத மாநில மக்களுக்கு நேரு கொடுத்த உறுதிமொழியை நிறைவேற்ற வேண்டும்; அப்படி நிறைவேற்ற முடியாவிடில் டில்லி அரசு உடனடியாகப் பதவியிலிருந்து வெளியேறிவிட வேண்டும்.

ஒரே சீரான கொள்கையை வகுக்க இயலாவிடில்...!

மதுவிலக்கு சம்பந்தமாக டெல்லி அரசு ஒரே சீரான கொள்கையை வகுக்கவேண்டும்.

காங்கிரசு ஆட்சியிலுள்ள பல மாநிலங்களில் மதுவிலக்கு ரத்து செய்யப்பட்டுவிட்டபோது, தி.மு.க. ஆட்சி மதுவிலக்கை அமுல் நடத்துகிறது. மதுவிலக்கைத் தொடர்ந்து அமுல் செய்வதால், தமிழக அரசுக்கு ஏற்படும் இழப்பை சரிக்கட்ட மத்திய அரசு உதவி செய்ய வேண்டும்.

தேர்வு முறையில் ஒழுங்கு!

யூனியன் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் தேர்வுகள் ஆங்கிலத்தில் நடத்தப்பட வேண்டும்; அல்லது ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கும் எல்லாத் தேசிய மொழிகளிலும் நடத்தப்பட வேண்டும்.

சதி வேறு செய்வதா?

மேற்கு வங்க அரசை வீழ்த்துவதற்கு மத்திய அரசு சதி செய்கிறது. அப்படி ஏதாவது நடந்தால் காங்கிரசு ஆட்சியில் இல்லாத மாநிலங்களில் உள்ளவர்கள் ஒன்றுகச் சேர்ந்து மத்திய அரசை எதிர்க்க நேரிடும்.

காங்கிரசு அல்லாத மாநில அரசுகளுக்கு மத்திய அரசு உதவி செய்ய மறுக்கிறது; இந்த எண்ணத்தை மாற்றிக்கொள்ள வேண்டும்.

வேலைக்காரர்கள் அல்லர்!

காங்கிரசு அல்லாத ஆட்சி நடக்கும் மற்ற மாநிலங்களை, மத்திய அரசு சந்தேகக் கண்ணோடு பார்க்கிறது. அப்படிப் பார்க்காமல் நண்பர்களைப் போல் பார்த்தால்தான் நாட்டு ஒற்றுமை ஏற்பட வழி உண்டாகும். நாங்கள் உங்களது வேலைக்காரர்கள் அல்லர்; பொதுப் பணியில் உங்களது பங்காளிகள்."

இடர்பாடின்றி செயல்படுத்தப்படும்

189 பஸ் வழித்தடங்கள் நாட்டுடைமையாகும்

சென்னை, ஜூலை 4—

"நாட்டுடைமையாக்கும் நடவடிக்கையின்கீழ் நடப்பு ஆண்டில், 189 வழித் தடங்கள் (ரூட்) அரசு வசமாகும்.

"75 மைல்களுக்குமேல் ஓடும் வழித் தடங்கள் (ரூட்கள்) 96-ம்; சென்னை நகருக்கு வரும்—சென்னையிலிருந்து புறப்படும் வழித் தடங்கள் 70-ம்; கன்னியாகுமரி மாவட்டத்திற்கு வரும் பஸ்கள்—அங்கிருந்து செல்லும் வழித் தடங்கள் 23-ம், அரசினரால் எடுத்துக்கொள்ளப்படும்.

"நடப்பு ஆண்டில் நாட்டுடைமையாகும் இந்த 189 வழித் தடங்களில் இப்போது 255 பஸ்கள் ஓடுகின்றன.

"அரசின் நாட்டுடைமை நடவடிக்கை, எந்த இடர்பாடுமின்றி செயல்படுத்தப்படும்."

—அமைச்சர் மு. கருணாநிதி (சட்டமன்றத்தில்)

மாபெரும் நவீன ரொட்டித் தொழிற்சாலை

சென்னையில் மத்திய அரசு அமைக்கிறது

சென்னை, ஜூலை 4—

சென்னை அடையாற்றில் நவீன ரொட்டித் தொழிற்சாலை ஒன்றை மத்திய அரசு துவங்க இருப்பதாகவும், ஆஸ்திரேலியா நன்கொடையாகக் கொடுக்கும் இயந்திரச் சாதனங்களைக் கொண்டு சென்னையில் அமையும் இது போன்ற தொழிற்சாலைகள் பம்பாய், ஆமதாபாத், டில்லி, கல்கத்தா ஆகிய இடங்களிலும் இருப்பதாகவும், 400 கிராம் எடையுள்ள ரொட்டித் துண்டுகள் ஒரு நாளைக்கு 35,000 வீதம் இத்தொழிற்சாலையில் உற்பத்தியாகும் என்றும் உணவமைச்சர் திரு. மதியழகன் சட்டமன்றத்தில் அறிவித்தார்.

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

காங்கிரசுப் பெயரைச் சொல்லிப் பிழைக்கின்றவர்களின் பேச்சு இது!

பொதுமக்கள், 'அப்படிப் பேசியவர்களின் சதித்திட்டமாகத்தான் இத்தீவிபத்து நடக்கிறது' எனக் கருதக்கூடும்.

குற்றவாளிகள் யாராயிருந்தாலும் நீதிமன்றத்தில் நிறுத்தியோ—பொதுமக்களால் எள்ளிநகையாடப்பட்டோ அதற்குரிய தண்டனையைப் பெறுவர்.

இந்தச் சதித் திட்டத்துக்குப் பின்னுல் எந்தக் கட்சி இருக்கிறது என்பதை நாம் விவாதித்துக்கொண்டிருப்பதைவிட, பாதிக்கப்பட்டவர்களுக்கு என்ன பாதுகாப்பு அளிப்பது—எப்படிக் குடியிருப்பு வசதி செய்வது—அவர்களுக்கு நீண்டகால நிவாரணம் எப்படிச் செய்யலாம் — என்பதை யோசிக்கவேண்டும்.

இதற்காக நாம் சபையை ஒத்திவைத்துவிட்டு விவாதித்துக்கொண்டிருப்பதால், இப்போது இங்கு நாம் பேசியதைப்போல் பொதுமக்களிடையேயும் பரவினுல் நல்லதல்ல.

எனவே, சபையை ஒத்திவைத்துவிட்டு விவாதிப்பது என்பது பயனளிக்கக்கூடியதுமல்ல—முறையானதாகவும் இருக்காது என்று கருதுகிறேன்."

கருத்திருமன் :—"முதலமைச்சரின் பதில் திருப்தியளிக்கக்கூடியதாக இல்லை. நீதி விசாரணை நடத்தினுல்தான் எங்கள் கட்சியின் மீதுள்ள அவதூறைப் போக்கிக்கொள்ள முடியும்."

அண்ணு :—"இப்படிப்பட்ட காரியங்களில் ஈடுபடுபவர்கள், ஒரு கட்சிக்காரர்கள் உட்கார்ந்து செய்யும் முடிவின் விளைவு அல்ல. கட்சியின் அடிமட்டத்தில் உள்ளவர்கள்—விவரமறியாதவர்கள்—தப்புக் கணக்குப் போட்டதன் விளைவாக இருக்கலாம். இதற்கு அகில இந்தியக் காங்கிரசுக் கமிட்டி கூடித் தீர்மானம் செய்யத்தேவையில்லை.'

கருத்திருமன் :—"எங்கள் கட்சி மீது சந்தேகம் எழும்வகையில் முதலமைச்சர் பேசுவதால் நீதி விசாரணை நடத்தப்படுமா இல்லையா என்பதைத் திட்டவட்டமாக அறிவிக்கவேண்டும்."

அண்ணு :—"அதைத்தான் முதலிலேயே சொன்னேன். முழுத் தகவலும் கிடைக்கவில்லை. கிடைத்தபின்னர்தான், தேவை என்றுல் நீதி விசாரணை வைக்கலாம். முதலில் போலீசு விசாரணை முடிவுபெறவேண்டும்.

"ஒரு கட்சி திட்டமிட்டு இதைச் செய்வதாக யாரும் சொல்லவில்லை. எந்தக் கட்சியிலும் இப்படிப்பட்ட அடிமட்டப்பேர்வழிகள் இருக்கலாம். இதனுல் ஆதாயம் தேட இருப்பவர்கள் இதனைச் செய்திருக்கக்கூடும்."

"திரு. கருத்திருமன் சார்ந்துள்ள கட்சியைச் சேர்ந்தவர்கள் பேசிய பேச்சு எப்படிப்பட்டது என்பதை அவரே அறிந்திருந்தாலும், அதனுல் அவர் பாதிக்கப்பட்டிருக்கமாட்டார் - அதனை அவர் பொருட்படுத்தவில்லை என்றே கருதுகிறேன்.

"ஆனுல் பொதுமக்கள் அந்தப் பேச்சைக்கொண்டு சந்தேகப்படக்கூடும். அடி மட்டத்தில் உள்ளவர்கள் அப்படிப் பேசினுலும் பொறுப்பான மட்டத்தில் இருப்பவர்கள் அப்படிப் பேசமாட்டார்கள் என்பதை அறிவேன்."

கருத்திருமன் :—"மீண்டும் மீண்டும் முதலமைச்சர் பேச்சு, சந்தேகத்தைத் தூண்டும் வகையிலேயே இருக்கிறது; நீதி விசாரணை உண்டா இல்லையா என்பதை அறிவிக்க வேண்டும்."

அண்ணு :—"இதுபற்றித் திட்டவட்டமாகத் தெரிந்துகொண்ட பிறகுதான் அதுபற்றிக் கூற முடியும். போலீசாரால் விவரம் சேகரிக்கப்படுகிறது; அது முடிந்ததும் நீதி விசாரணை பற்றி யோசிக்கலாம்."

[இந்த நேரத்தில், திரு. கருத்திருமன், எழுந்து, 'முதலமைச்சர் பதிலில் திருப்தி இல்லை' எனக் கூறி வெளிநடந்தார். அவர் கட்சியினரும் பின்தொடர்ந்தனர்.]

அல்லலுக்கு ஆளாகியுள்ளோரே அஞ்சற்க!

அவதி துடைத்திட--ஆறுதலளித்திட அக்கறையுடன் செயலாற்றும் அரசு

விபத்துக்களைத் தடுத்திடும்--வேதனைகளைப் போக்கிடும்

தீ விபத்தால் பாதிக்கப்பட்டோருக்கு அண்ணுவின் உறுதிமொழி

சென்னை, ஜூலை 5--

"ஏழை எளியோர் வாழ்விலே தீமூட்டிவிடும் சமூக விரோதிகள் பிடிபட்டு மிகக் கடுமையான தண்டனைக்கு உள்ளாவார்கள் என்பதில் ஐயமில்லை.

"சமூக விரோத சக்திகளை ஒடுக்குவதில் இந்த அரசு முனைந்து நிற்குமென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

"ஏழை எளியோர் மீது இந்தத் தீவிபத்தை ஏவி நாசம் விளைவிக்கும் இந்த சதிகாரர்களை நாடு மன்னிக்காது!"

இவ்வாறு முதலமைச்சர் அண்ணு அவர்கள், தீ விபத்து ஏற்பட்ட இடங்களைச் சுற்றிப்பார்த்து—பாதிக்கப்பட்டோருக்கு ஆறுதல் கூறித் திரும்பியபின் விடுத்துள்ள உருக்கமிக்க அறிக்கையில் சுட்டிக்காட்டி எச்சரித்துள்ளார்.

நிலைமைகளை விளக்கியும், நெருக்கடியான இந்த நேரத்தில் கழகத் தோழர்கள் ஆற்றவேண்டிய கடமையினை நினைவுறுத்தியும் அந்த அறிக்கையில் மேலும் அவர் குறிப்பிட்டிருப்பதாவது :—

வேதனை தரத்தக்க 'நாசவேலை'?

"சென்னை—மயிலாப்பூர் பகுதியில் வேதனை தரத்தக்கவிதமாக தீ விபத்துக்கள் ஏற்பட்டிருப்பது கண்டு, 'தீயோர் எவரோ இத்தகைய நாசவேலையில் ஈடுபட்டுள்ளனர்' என்ற எண்ணம் பரவலாக ஏற்பட்டிருக்கிறது.

தீ விபத்தால் பொருள் நட்டம் மட்டுமன்றி உயிர்ச் சேதம் ஏற்பட்டு பல்லாயிரக்கணக்கான மக்கள் அவதியுற்றுள்ளனர்.

தீ விபத்து ஏற்பட்டதும் அதை அணைத்துவிடவும், மக்களை வெளியேற்றுவதிலும் நமது கழகத் தோழர்கள் சுறுசுறுப்பாகப் பணியாற்றுகின்றனர்.

போலீசுத் துறையினரும், ஊர்க்காவல் படையினரும் மிகுந்த சுறுசுறுப்புடன் பணியாற்றுகின்றனர்.

மாநகராட்சிமன்றத் துணை மேயரும், உறுப்பினர்களும், கமிஷனர்—மற்ற அதிகாரிகளும், பாதிக்கப்பட்டோருக்கான இதமளிக்கும் காரியத்தைக் கவனித்துக்கொண்டிருக்கிருர்கள்.

மயிலைத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் இராம. அரங்கண்ணல், விபத்து நடைபெற்ற இடத்தில் தங்கியிருந்து ஆவன செய்துவருகிருர்.

சதிகாரர்கள் சிக்குவது நிச்சயம்

வேண்டுமென்றே, 'பாஸ்பரஸ்' போன்ற வெடிமருந்துகளைத் தூவி சதிகாரர்கள் இந்தத் தீ விபத்துக்களை மூட்டிவிடுகிருர்கள் என்று மக்கள் கருதுகின்றனர்.

'கழகத்தின் ஆதரவாளர்களான குடிசைவாழ் பகுதியினர்மீது அரசியல் விரோதம் காரணமாக வஞ்சம் தீர்த்துக்கோள்கின்றனர்' என்ற பேச்சும் பலமாக அடிபடுகிறது.

சதிகாரர்களது செயல் கண்டுபிடிக்கப்படும்! சதிகாரர்கள் சிக்கிக்கோள்வது நிச்சயம்!

வேதனையுறும் மக்களுக்கு நிவாரணம்

தீபத்துக்காளான—வீடிழந்து, சொத்திழந்து வேதனைப்படும் பல்லாயிரவரைக் கண்டு பெரிதும் கலங்கினேன்.

என்னுடன் இந்தப் பகுதிக்கு வந்திருந்த பொதுப் பணித்துறை அமைச்சர் கருணுநிதி பெரிதும் கவலைப்படுகிருர்.

வீடிழந்து வேதனையுறும் மக்கள் தற்காலிகமாகத் தங்கியிருக்க மாநகராட்சி மன்றப் பள்ளிக்கூடங்கள் திறந்துவிடப்பட்டுள்ளன.

அவதியுறும் மக்களுக்கு உணவளிக்கும் பொறுப்பை மாநகராட்சிமன்றம் மேற்கொண்டிருக்கிறது.

நிவாரண வேலைகளை அரசு மும்முரமாக மேற்கொள்கிறது.

கழகத் தோழர்களே-விழிப்புதேவை

இந்தச் சமயத்தில் தொண்டர்கள்—கழகத் தோழர்கள் விழிப்புடனிருந்து அவதியுறும் மக்களுக்கு ஆறுதல் தந்துதவ வேண்டுகிறேன்.

முதல் கட்டமாக, பீதி பரவாதபடி பார்த்துக் கொள்ளவேண்டும்.

'விபத்துக்களை மூட்டுவோரைக் கண்டறிய அரசு தீவிர நடவடிக்கை எடுத்துவருகிறது' என்ற செய்தியை அனைவருக்கும் எடுத்துரைக்க வேண்டும்.

அல்லலுற்றோரே--அஞ்சற்க!

அவதியுற்ற மக்கள், 'இந்த அரசு தக்கது செய்திடும்' என்ற எண்ணத்தைக் கொண்டு அச்சம் கொள்ளாது இருந்திட வேண்டும்.

"போலீசுப் படையினர் உங்கள் பகுதியில் உலவியபடி இருப்பர்—

"கழகத் தோழர்கள் — தொண்டர்கள் உங்களோடு உள்ளனர்—

"அவதி துடைத்திட — ஆறுதல் அளித்திட — விபத்து தடுத்திட — வேதனை போக்கிட — தமிழக அரசு அக்கறையுடன் இருந்துவருகிறது — மும்முரமாக முனைந்து நிற்கிறது; எனவே அஞ்சற்க"

என்று அல்லலுக்கு ஆளாகியுள்ள அனைவருக்கும் கூறிக் கொள்கிறேன்.

உங்களோடு சேர்ந்து கண்ணீர் வடிக்கிறேன் -- கலக்கமடைகிறேன்; ஆனுல் அதேபோது, 'இந்த வேதனை துடைக்கப்படும்' என்ற உறுதியையும் தந்திடுகிறேன்."

பாதிக்கப்பட்ட மக்களின் பரிதாப நிலை

'பாதுகாப்பாக இருக்கும்' எனக் கருதி இடுகாட்டுக்கே சென்றுவிட்டனர்

சென்னை, ஜூலை 5—

தென் சென்னைப் பகுதியில் இன்று பன்னிரண்டு இடங்களில் தீ விபத்துக்கள் ஏற்பட்டன. இவ்விபத்துக்களால் நூற்றுக்கணக்கான குடும்பங்கள் பரிதாப நிலைக்கு ஆளாயின!

இப்படித் திடீரென ஏற்பட்ட தீ விபத்துக்களால் பாதிக்கப்பட்ட ஏழை மக்கள் தங்கள் வீடுகளை விட்டுவிட்டுத் திறந்தவெளிகளுக்கும், பள்ளிக் கட்டிடங்களுக்கும், மாளிகைகளின் வெளிப்புறங்களுக்கும், சிலர், 'சுடுகாட்டுக்குச் சென்றுலும் பாதுகாப்பாக இருக்கும்' என அங்கேயும் சென்றுவிட்டனர்.

இன்று நடந்த தீவிபத்தில் இரு பகுதிகள் மிக அதிகமாகப் பாதிக்கப்பட்டன.

மந்தவெளி பேருந்து நிலையத்திற்குப் பின்னுல் உள்ள கபாலித்தோட்டம் குடிசைப் பகுதியில் 200 குடிசைகளும், முண்டகக்கண்ணியம்மன் கோயில் தெருவுக்கு வடக்குப் பகுதியிலுள்ள நாட்டான் தோட்டம் பகுதியில் 180 குடிசைகளும் எரிந்து சாம்பலாயின. இவ்விரு பகுதிகளும் மிகப் பயங்கரமாகப் பாதிக்கப்பட்டவையாகும்.

பீதியடைந்த குடிசைவாழ் மக்கள், கையில் தடியுடன் தங்கள் பகுதிகளைக் காவல் காத்துவருகின்றனர்.

இந்தப் பயங்கரமான தீவிபத்துக்கள், சில சமூக விரோதிகளால் கூறைகளின்மீது எறியப்படும்—எளிதில் தீப்பிடிக்கக்கூடிய ஒரு பொருளால், ஏற்படுகின்றன என்று கருதப்படுகிறது.

அண்ணு அன்பழைப்பு

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

சைக் கேட்டுக் களைத்திருக்கிற இந்த மன்றத்தை, வேறு பல புள்ளிவிவரங்களைக் கொடுத்து மேலும் களைப்படையச் செய்ய விரும்பவில்லை.

இந்த அடிப்படையில்தான் நிதிக் குழுகூட, இந்தக் கடன்களில் தள்ளுபடி செய்யவேண்டியதையெல்லாம் தள்ளுபடி செய்து—பலவற்றை ஒன்றுக இணைத்து—ஒரு 'கன்சா லிடேடெட் பண்டு' என்று ஆக்கி—அதற்கு ஒரு தவணை கொடுத்து—வட்டி விகிதத்தைக் குறைத்து—'கொஞ்சம் பளுவைக் குறைக்க வேண்டும்' என்று கேட்டிருக்கிருர்கள்.

நாம் 4½ சதவீதம்வரையில் சில இனங்களில் வட்டி கொடுக்கிரேம்—மத்துய அரசுக்கு சில இனங்களில் 5 சதவீதம் வட்டி கொடுக்கிரேம்; சில இனங்களில் 3 சதவீதம் வட்டி கொடுக்கிரேம்; சில இனங்களில் 2 சதவீதம் வட்டி கொடுக்கிரேம்; இப்படி வட்டி வீதம் மாறி மாறி இருக்கிறது; 'இவைகளையெல்லாம் ஒருமுகப்படுத்திச் செய்ய வேண்டும்' என்று நிதிக் குழு சொல்லுகிறது.

நான் அதற்கும் ஒருபடி முன்னுலே போய்—முன்னுலே நாம் இந்த விவசாயக் கடனைத் தள்ளுபடி செய்ததைப்போல்—'தள்ளுபடி செய்யவேண்டும்' என்பேன்.

கிட்டத்தட்ட எல்லா மாநிலங்களும் சேர்ந்து மத்திய அரசுக்கு ஐயாயிரம் கோடி ரூபாய்வரையில் கடன் தரவேண்டியிருக்கிறது. நிரம்ப வட்டியைக் கட்டிக்கொண்டுவருகிரேம். நான் குறிப்பிட்டபடி, அவர்களும்கூட இப்படிப் பல்வேறு வகையான முறையில், வருவாய் வர முடியாத வகையில்தான் அந்தக் கடனை வைத்திருக்கக்கூடும். அதைப் பற்றி முழுத் தகவலும் என்னிடத்திலே இல்லை.

ஐயாயிரம் கோடி ரூபாய்க் கடன் தொகையில், குறைந்தது 50 சதவீதம்—அதாவது 2,500 கோடி ரூபாய்க் கடனை உடனடியாகத் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று மத்திய அரசை நான் கேட்டுக்கொள்வதற்கு உங்களுடைய மேன்மையான ஒத்துழைப்பை நாடுகிறேன்.

"இது, கழகம் சொல்லுகிற விவரம்" என்று உங்களுக்கு யாருக்காவது அருவருப்பு இருக்குமானுல், உங்களுடைய கட்சியினுலேயே இந்த நிதிக் குழுவிலே ஒருமுறை அமர்த்தப்பட்டவரும் — ஒரு மாநிலத்திற்குக் கவர்னராக இருந்தவரும்—பல முறை பண்டித ஜவகர்லால் நேருவுடன் சிறைச்சாலைக்குச் சென்றவரும்—தெளிவான அரசியல் கண்ணேட்டம் உடையவருமான திரு. சந்தானம் அவர்கள், 'ஐயாயிரம் கோடி ரூபாய்க் கடனை 2,500 கோடி ரூபாயாகக் குறைக்க வேண்டும்' என்று இன்றல்ல—சில ஆண்டுகளுக்கு முன்னுலேயே வலியுறுத்திச் சொல்லியிருக்கிருர்கள்.

ஆகையால், 'கழகத்திலிருந்து வருகின்ற கோரிக்கை' என்று பார்க்கக் கூடாது.

வேண்டுமானுல் உங்களுக்கு மகிழ்ச்சிகூட வரலாம்; 'திருப்பித் திருப்பி அண்ணுதுரை, நாங்கள் சொன்னதைத்தான் சொல்லுகிருர்' என்று மகிழ்ச்சியுறுங்கள். நீங்கள் மகிழ்ச்சியடைகின்றபோது — உண்மையிலேயே சொல்கிறேன்—எனக்கும் உங்களைப் பார்த்து எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கிறது தெரியுமா?

மகிழ்ச்சியடையுங்கள்; ஆனுல், இந்தக் காரியத்திலே குறுக்கிட்டு, நமக்குக் கிடைக்கும் வாய்ப்புக்களைக் கெடுக்காதீர்கள் என்று மட்டும் உங்களை நான் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

[தொடரும்]

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.